# வாழ்விக்கும் வைணவம்

ஸ்ரீவைஷ்ணவச் சுடராழி D.A.ஜோசப், பாண்டிச்சேரி
18, 4th Cross (Upstairs) Rainbow Nagar, Pondicherry 605 011
Phone: 0413-2210187 Web: www.dajoseph.com Email: deyeje@yahoo.com

நம் முன்னோர்களிடத்தில் இந்தக்கால இளைஞர்களுக்குப் பிடிக்காத ஒரு விஷயம் என்னவென்றால் சில கசப்பான ஆணைகளை முரசு அறைந்தது போல் அறைந்து இதுதான் சட்டம் என்று கூறிவிட்டுப் போய்விட்டார்கள். அப்படி ஒரு கசப்பைப் பற்றித் தான் இன்று எழுதப் போகிறேன். கோபிக்காதீர்கள்; கொந்தளிக்காதீர்கள். என் கூற்றில் நியாயம் இருக்கிறதா என்று மட்டும் பாருங்கள்.

வடமொழியில் ஒரு பழமொழி உண்டு. அதுபின் வருமாறு. "ஸ்வயார்ஜிதம் தனம் உத்தமம், பிதுரார்ஜிதம் மத்யமம், ப்ராதுர் வித்தம் அதமம், ஸ்த்ரீதனம் அதமாதமம்".

இதன் பொருள் 'சுய சம்பாத்யம் சிறந்தது. தந்தையின் சொத்து சுமாரானது. சகோதரனுடைய சம்பாத்யம் மோசமானது. பெண்ணால் வரும் மஹாகேவலம்' என்பதாகும். மனிதனுக்குப் பலவழிகளில் பணம் வர வாய்புண்டு. தகப்பன்வழி சொத்தாக அது வந்தாலும் சகோதரனுடைய சம்பாத்யம் மூலம் அது வந்தாலும் அது அவ்வளவு சிறப்பல்ல. தானே தேடும் செல்வம் தான் உயர்ந்தது. ஆனால் மனைவி, மகள், சகோதரி போன்ற பெண்களின் சம்பாத்தியத்தைத் தான் அனுபவிப்பது மிகவும் மோசமான குணம் என்று இந்தப் பழமொழி வலியுறுத்துகிறது.

ஆண்களைவிடப் பெண்கள் அதிகம் சம்பாதிக்கும் காலமிது. பெண்களை வேலைக்கு அனுப்புவதை உயர்ந்த கொள்கையாக இன்றைய அரசும் சமுதாயமும் நினைக்கின்றன. பெண்களை மேன்மைப்படுத்துவது அதன் நோக்கம் என்று அதற்கு வியாக்யானமும் சொல்லுவர். இப்படி ஒரு காலகட்டத்தில் பெண்ணால் வரும் பணம் மஹாகேவலம் என்று நான் ஒரு மேற்கோள் காட்டினால் அது படிப்பவருக்கு பிற்போக்காகத் தோன்றலாம். அரக்கத் தனமாகக் கூடக் காட்சியளிக்கலாம். ஆனால் முன்னோர்கள் கூற்றினை அவ்வளவு சுலபமாக ஒதுக்கிவிட முடியாது.

பெண்களில் இருவகை உண்டு. 'நான் போலைக்குப் போய் சம்பாதித்துத் தான் தீருவேன்' என்று அடம்பிடிப்பது ஒரு வகை. அப்படிப்பட்ட மனப்பான்மையின் விளைவுகளை, சென்ற ஏப்ரல் மாத கீதாசார்யனில் விளக்கினேன். 'சம்பாதித்துக் கொடுத்தால் தான் எனக்கு வாழ்க்கையா?' என்று தலைவிதியை நொந்து கொண்டு உழைக்கப் போகிற பெண்கள் இன்னொரு வகை. அவர்களைப் பற்றித்தான் இன்று எழுதுகிறேன். ஏனென்றால் அப்படிப் பட்டவர்கள் ஏராளமாய் இருக்கிறார்கள்.

புராண இதிகாசங்களில் வரும் மஹாபுருஷர்களில் யாரும் மனைவியைச் சம்பாதிக்க அனுப்பியதாகச் செய்தியில்லை. ராமன், காட்டில் ஆண்டியாய் அலைந்த போது, உணவு தேடும் பொறுப்பை

சீதையிடம் விடவில்லை. தானும் தம்பியும் தான் அதைச் செய்தார்கள். சீதைக்குச் சமையல் வேலை மாத்திரமே. பஞ்ச பாண்டவர்கள் பஞ்சத்தின் பாண்டவர்களாக காட்டில் அலைந்தபோது திரௌபதியை வயிற்றுப்பிழைப்பின் பொறுப்பை ஏற்கும்படிச் சொல்லவில்லை. அவர்கள் விராட தேசத்தில் அடைக்கலம் புகுந்தபோதும் கூட திரௌபதியை விராட தேசத்து மஹாராணியின் தோழிப் பெண்ணாக ஆக்கித் தாங்கள் கீழ்நிலை வேலைகளை ஏற்றுக் கொண்டார்கள். பீமன் சமையல் அறையில் கரண்டி பிடித்தான். நகுல சகாதேவர்கள் குதிரைகளை மேய்த்தார்கள். நளமஹாராஜன் வெறும் கோவணத்தோடு அலைந்தபோதும் கூட தன் மனைவி தமயந்தியை அவளுடைய தகப்பனாருடைய வீட்டுக்கு அனுப்பி அவள் கௌரவமாக வாழும்படிச் செய்து தான் மட்டும் வனவாசத் துன்பங்களை ஏற்றுக் கொண்டான். அவளை ஏதாவது ஒரு வீட்டுக்கு வேலைக்காரியாக்கிப் பணம் சம்பாதிக்க எண்ணவில்லை. ராமனை, தசரதன் காட்டுக்கு அனுப்பியபோது அவனோடு காட்டுக்கு புறப்பட்ட சீதையைப் பார்த்த நாட்டுமக்கள், "ஆகாயத்துப் பறவைகள் கூட பார்க்கமுடியாதபடி பத்திரமாக அந்தப்புரத்திலே வந்து பாதுகாக்கப்பட்ட சீதையை இப்படி ஊரெல்லாம் பார்க்கும்படி நடுத்தெருவுக்கு கொண்டு வந்து விட்டாயே தசரதா," என்று மன்னனை ஏசினார்கள். தசரதன் அன்றுவரை தன் மருமகளை அவ்வளவு கௌரவமாக வைத்திருந்தான். அரிச்சந்திரன் தன் மனைவியை இன்னொருவர் பொறுப்பில் ஒப்படைத்தது கூட சத்தியத்தின் பெருமையை காக்கத் தானேயன்றி சம்பாத்தியத்துக்காக அல்ல.

அரண்மனை மயிலை சாக்கடையில் தள்ளிவிட்டது போல இன்று பெண்கள் பணம் சம்பாதிப்பதற்காக பல்வேறு இடங்களுக்கு அனுப்பப்படுகிறார்கள். சம்பாதிக்கும் பெண் என்று சொன்னவுடனே டாக்டர், வக்கீல், பேராசிரியை, என்று நினைக்காதீர்கள். இவர்கள் மிகக் குறைந்த சதவீதமே. ஜவுளிக் கடையில் துணி எடுத்துப் போடுதல், அச்சகத்தில் அச்சு கோர்த்தல், சமையல் செய்தல், தரை கூட்டுதல், ஆயா வேலை பார்த்தல், எடுபிடி வேலைகள் செய்தல், முதலிய கீழ்மட்ட வேலைகள் செய்யும் பெண்கள்தான் பெண் சமுதாயத்தில் அதிகம். பஸ்களிலும், ரயில்களிலும் ஆபாசமாக இடிபட்டுக் கொண்டும் கால்கடுக்க நின்று கொண்டும் பயணம் செய்து, பணிபுரியும் இடங்களில் சாட்டையின் சொடுக்குக்கு சுழன்றுவரும் பம்பரம் போல் மேலாளின் உத்தரவுக்குக் கீழ்ப்படிந்து கண்ட கண்ட வசவுகள் ஏற்றுக் கொண்டு சில இடங்களில் உடலை ஆபாசமாக அடகு வைத்து இப்படியெல்லாம் சித்ரவதைகளை அனுபவித்து பணம் சம்பாதிக்கும் பெண்கள் பழைய காலங்களை எண்ணி ஏங்காமல் இருப்பதில்லை.

இவர்கள் குழந்தை வளர்ப்பை நூறு சதவீதம் தாய்மைப் பொறுப்போடு நிறைவேற்ற முடியவில்லையே என்று ஏங்குகிறார்கள். தாய் முகத்தைப் பாராமல் அவள் கொடுக்கும் பணத்தின் பலனை மட்டுமே அனுபவித்து வளரும் பிள்ளைகள் கடைசி காலத்தில் பணத்தைத் திருப்பித் தருமே தவிர பாசத்தைக் கொடுக்கமாட்டா. அன்பு இருக்கும் இடம் பெண்மை, ஆறுதல் வழங்கும் புனித இடம் பெண்மை. வாழ்வை

அர்த்தமாக்குவது பெண்மை. குடும்பத்தைக் குதூகலிக்கச் செய்வது பெண்மை. அதைப் பணம் சம்பாதிக்கும் யந்திரமாக்கி நடுத்தெருவில் சீரழிய விட்டு வேடிக்கை பார்க்கிறார்கள்.

''நீ படித்த படிப்பும் உன் திறமையும் நீ சும்மா இருந்தால் வீணாகும். அடுப்பு ஊதுவதற்கா இவ்வளவு படித்தாய்? போய் வேலை பார்'' என்கிறார்கள். கல்வியும் திறமையும் வீணாகக் கூடாது என்று அக்கறைப்படும் இந்த உயர்ந்த மஹான்கள் இப்படிப் பேசுவது பணத்தாசையினாலே. இவர்களுடைய கூற்றுக்கு எப்போது நியாயமான அந்தஸ்து கிடைக்கும் என்றால் நாட்டில் படித்தவர்களுக்கும் திறமை சாலிகளுக்கும் பஞ்சம் ஏற்பட்டு உத்யோகம் பார்க்க ஆளே இல்லை என்கிற நிலை சமுதாயத்தில் ஏற்பட்டால் அன்றுதான் இவர்கள் சொல்வது நியாயமாகும். ஆனால் இன்று வேலையில்லாத் திண்டாட்டம் தலைவிரித்தாடுகிறது. நீங்கள் வேலை செய்யாவிட்டால் அந்த வாய்ப்பு இன்னொரு ஆத்மாவுக்குப் போய்ச் சேரும். அதுவும் புண்ணியம் தானே! சமூக சேவைதானே!

மூன்று வேளை சோற்றுக்கே வழியில்லை என்கிற நிலையில் உள்ள தம்பதிகளுக்கு மட்டுமே இருவரும் சம்பாதிக்கக உரிமை உண்டு. சொந்தவீடு வாங்க வேண்டும், சொத்து சேர்க்க வேண்டும் என்பதற்காக பெண்களை வேலைக்கு அனுப்புகிறவர்கள் தாய்மையைப் பழிக்கிறார்கள்; பெண்மையைச் சிதைக்கிறார்கள்; எதிர்கால இந்தியாவைப் பாழாக்குகிறார்கள். பெண் சம்பாத்தியத்தை நியாயப்படுத்துவதற்காக வெளி நாடுகளை மேற்கோள் காட்டுகிறார்கள். வெளிநாடுகள் என்ன முனிவர்கள் வாழும் தேசங்களா? அல்லது ஞானியரின் உறைவிடமா? அவர்கள் ஒன்று செய்தால், நாமும் அப்படியே செய்ய வேண்டுமா? அவர்கள் சூரியக் குளியல் என்று அம்மணமாக அலைவார்கள். சீதோஷ்ணத்துக்குத் தேவையென்று மதுவே கதியென்று கிடப்பார்கள். புகை பிடிக்கும் பெண்களும் கஞ்சா பயன்படுத்தும் மகளிரும் வருடத்துக்கு வருடம் கணவன்களை மாற்றும் மனைவிகளும் அங்கே அதிகம். இதெல்லாம் நம்நாட்டுக்குத் தேவையா?

முழுநேரக் குடும்பத் தலைவியாக இருக்கும் பெண்களால் உருவாக்கப்பட்ட இளைய சமுதாயம் குடும்பப் பற்றும் பொறுப்புணர்வும் ஒழுக்கமும் உள்ளவர் களாக இருப்பார்கள். பெண் விடுதலை பேசிய பாரதியாரும் அவரைத் தூண்டிவிட்ட சிஸ்டர் நிவேதிதாவும் பாரம்பரியமான தாய்மார்களுக்குப் பிறந்தவர்கள்தான். அதனால் தான் அவர்கள் மேன்மையுற்று இருந்தார்கள். ஏதோ ஒரு காலக் கட்டத்தின் நெருக்கடிக்காக பரிகாரமாக சொல்லப்பட்ட ஒரு கருத்தைக் கட்டிப் பிடித்துக் கொண்டு இந்தியப் பண்பாட்டையே பாழாக்குகிறோம். இது நியாயமா? மகளின் சம்பாத்தியத்துக்கு ஆசைப்பட்டு அவளை மணம் முடித்துக் கொடுக்காமல் அவளை வீட்டுக்குள்ளே குமரிக் கிழவியாக்கும் பெற்றோர்கள் எத்தனைபேர்? பிரசவமான ஒரே மாதத்தில் மனைவியை ஆபிசுக்குத் துரத்தும் கணவன்மார்கள் எத்தனைபேர்? என்று தணியும் இந்த கொடுமைகளின் வேகம்?

''பிச்சை எடுத்தாவது உன்னைக் காப்பாற்றுவேன் நீ வீட்டிலே நிம்மதியாக இரு'' என்று தன் மனைவியைப் பார்த்துக் கூறுபவனே ஆண்பிள்ளை, மாப்பிள்ளை'.